1992 ஏப்ரல் 28]

663—

மகளிர் மன்றங்களுக்காக பால் பண்ணை அமைக்கும் திட்டம்.

*5943— திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் ;

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் 384 யூனியன்களிலும் ஒவ்வொரு யூனியனிலும் உள்ள 30 மகளிர் மன்றங்களுக்காக பால் பண்ணை ஏற்படுத்தும் திட்டம் அமல் நடத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், ஊரின் அருகில் புறம்போக்கு நிலம் அல்லது கண்மாய்கள் இருந்தால் அதில் புல் வளர்த்து பால் பண்ணை வைத்துள்ளவர்களுக்கு தீவனம் குறைந்த விலையில் கொடுப்பதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மகளிர் மன்றங்களுக்காக பால்பண்ணை அமைக்கும் திட்டம் இல்லை. ஆனாலும் மகளிருக்கென தனியாக பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் ஒவ்வொரு யூனியனிலேயும் 30 மையங்களை வைத்திருக்கிறோம். மழை இல்லாத காலங்களில் அவர்கள் எல்லாம் வேலை இல்லாமல் மிகவும் கஷ்டமான நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரே வழி இந்த பால் பண்ணையை அமைத்துக் கொடுப்பது ஒன்றுதான். அதன் மூலமாக அவர்கள் வாழ்வதற்கு ஏதாவது வழி ஏற்படும். ஆகவே மீண்டும் அதை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு இந்த பால் பண்ணைகளை ஒவ்வொரு மகளிர் மன்றத்திற்கும் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே ஏ.டி. ஒருவர் இருக்கிறார் பஞ்சாயத்து யூனியனிலே, அத்தோடு முக்கிய சேவகிகள் இருக்கிறார்கள். இருவரையும் இணைத்து— இணைந்து இந்த பால் பண்ணைகளை அமைத்துக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் மையங்களுக்கு என்று பால் பண்ணைகளை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் இந்த பால் உற்பத்தி தொழிலில் ஈடுபடக்கூடிய மகளிருக்கு நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் காலத்தில் அதிக முக்கியத்துவம் கொடுத்து 1991—92 ஆம் ஆண்டில்

[1992 ஏப்ரல் 28

112 முக்கிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து இருக்கிறோம். எனவே தொழிலில் அக்கறை உள்ள பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஆகவே அவர்கள் அதைப் பயன்படுத்திக் கொண்டு செயல்பட முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தனியாக ஒவ்வொரு யூனியனிலும் இல்லா விட்டாலும் கூட ஒரு தொகுதிக்கு ஒன்றாக ஆரம்பிக்கலாம். 100 பெண்களுக்கு ஒன்று என்று ஆரம்பிப்பீர்களேயானால் அவர்களுக்கு வருவாய் பெருகக்கூடிய நிலைமை உருவாகும். ஆகவே, அது மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அத்தோடு கண்மாய் கள் இருக்கின்றன. அது, பலமுறை நான் இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இந்தக் கண்மாய்களிலே ஆக்கிரமிப்பு செய்துகொண்டு தண்ணீர் தேங்குவதற்குக் கூட இடம் இல்லாத நிலைமை இருக்கிறது. அங்கே புல் வளர்க்கவேண்டும். புல் வளர்ப்பதற்காக ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு மாண்புமிகு ஆதித்திராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரோடு கலந்து பேசி, அங்கே ஆக்கிரமிப்புகளை அகற்றி புல் வளர்த்துக் கொடுப்பதற்கான நடவடிக்கையை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தான் பரிசீலிக்க வேண்டும். பெண்களுக்கு சங்கங்களை ஆரம்பிப்பது பற்றி சொன்னார்கள். நீங்களும் ஒத்துழைப்பு தாருங்கள். நிறைய சங்கங்களை ஆரம்பிக்கிறோம். அந்தச் சங்கங்களுக்கு கடனாக மாடுகளை தருகிறோம். அந்த மாடுகளை பராமரிப்ப தற்கு வேண்டிய மேய்ச்சல் நிலங்களைப் பற்றி கேட்டார்கள். அதைப்பற்றி நான் வருவாய்த்துறை அமைச்சரோடு கலந்து பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 664, திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்

664—

சாம்பலைக் கொண்டு கல் தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல்.

*289 திரு. டி. சுதர்சனம் :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் சாம்பலைக் கொண்டு கல் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?